**செய்தி வெளியீடு எண்:209** **நாள்:03.06.2021**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (3.6.2021) தலைமைச் செயலகத்தில், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த 3 பத்திரிகையாளர்களின் குடும்பத்தினருக்கு தலா 10 இலட்சம் ரூபாயும், 2 மருத்துவர்கள், ஒரு காவல் ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் ஒரு நீதிபதி ஆகியோரின் குடும்பத்தினருக்கு தலா 25 இலட்சம் ரூபாயும், என மொத்தம் ஒரு கோடியே 55 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை நிவாரண உதவித் தொகையாக வழங்கினார்கள்.

பேரிடர் மற்றும் பெருந்தொற்று காலங்களில் தங்கள் உயிரைப் பணையம் வைத்து செய்தித்தாள்கள், காட்சி–ஒலி ஊடகங்களில் பணியாற்றி வருகின்ற ஊடகத்துறையினர் அனைவருமே தமிழகத்தில் முன்களப் பணியாளர்களாகக் கருதப்படுவர் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மேலும், கொரோனா வைரஸ் நோய்த்தொற்று காலத்தில் பல்வேறு சிரமங்களுக்கிடையே அரும்பணியாற்றி வரும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பதிவு செய்யப்பட்ட பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மற்றும் காலமுறை இதழ்களில் பணிபுரியும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்கள், புகைப்படக்காரார்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் ஆகியோருக்கு சிறப்பு ஊக்கத் தொகையாக ரூபாய் 5 ஆயிரமும், பத்திரிகை மற்றும் ஊடகத் துறையில் பணிபுரியும் அரசு அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்கள் கொரோனா நோய்த் தொற்று காரணமாக இறக்க நேரிட்டால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு 10 இலட்சம் ரூபாயும் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்படும் எனவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

அதனடிப்படையில், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சன் நியூஸ் தொலைக்காட்சியின் செய்தியாளராக பணியாற்றிய திரு.ஜெ.கணேசமூர்த்தி, மதுரை மாவட்டத்தில் நமது முரசு நாளிதழின் செய்தியாளராக பணியாற்றிய திரு.எஸ்.நம்பிராஜன் மற்றும் தேனி மாவட்டத்தில் தினமணி நாளிதழின் செய்தியாளராக பணியாற்றிய திரு.M.சரவணக்குமார் ஆகிய மூன்று பத்திரிகையாளர்களின் குடும்பங்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில், தலா 10 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்கள்.

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளித்து அவர்களைக் காப்பாற்றும் அரும்பணியில், தங்களது இன்னுயிரை இழந்த மருத்துவர் எஸ். சந்திரசேகரன், மருத்துவர் கே. இரவீந்திரன் ஆகியோரது குடும்பத்தினருக்கு தலா 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வழங்கினார்கள்.

மேலும், பணியின் போது கொரோனா தொற்றால் உயிரிழந்த மாவட்ட தலைமை குற்றவியல் நீதித் துறை நடுவர் திரு. வி.எம். நீஷ், சென்னை, தமிழ்நாடு அதிதீவிர பயிற்சிப் பள்ளி காவல் ஆய்வாளர் திரு. எம். ஜோனத்தான், செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் காவல் நிலையக் தலைமைக் காவலர் திரு. சதீஷ்குமார் ஆகியோரது குடும்பத்தினருக்கு தலா 25 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வழங்கினார்கள்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு.J.K. திரிபாதி, இ.கா.ப., மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

*********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**